சுருக்கம்

ஆதிதிராவிடர் நலம் – கல்வி – விடுதிகள் – 2001–02ம் ஆண்டு முதல் 2007–08ம் ஆண்டு வரை ஆதிதிராவிடர் நல விடுதிகளுக்கு சொந்தக் கட்டிடம் கட்ட நிர்வாக மற்றும் நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணை வெளியிடப்பட்டது – பல்வேறு காரணங்களினால் கட்டப்படாமல் உள்ள 35 ஆதிதிராவிடர் நல விடுதிகளுக்கு திருத்திய நிர்வாக மற்றும் நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணை – வெளியிடப்படுகிறது.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந 2) துறை

அரசு ஆணை (நிலை) எண். 8

நாள் 12.1.2011
மார்கழி 28, திருவள்ளுவர் ஆண்டு 2041.
படிக்கப்பட்டது:

I. அரசு ஆணை (நிலை) எண். 35, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந2) துறை, நாள் 23.3.02.

II. அரசு ஆணை (நிலை) எண். 95, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந2) துறை, நாள் 27.6.03

III. அரசு ஆணை (நிலை) எண். 195, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந2) துறை, நாள் 5.9.03

IV. அரசு கடித எண். 2382/ஆதிந 9(2)/ 04–1, நாள் 12.2.04

V. அரசு ஆணை (நிலை) எண். 31, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந2) துறை, நாள் 18.2.04

VI. அரசு ஆணை (நிலை) எண். 121, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந2) துறை, நாள் 24.9.04

VII. அரசு ஆணை (நிலை) எண். 3, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந2) துறை, நாள் 6.1.05

VIII. அரசு ஆணை (நிலை) எண். 146, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந2) துறை, நாள் 21.11.06

IX. அரசு கடித (நிலை) எண். 17, /ஆதிந2/07, நாள் 23.2.07

X. அரசு கடித (நிலை) எண். 23, /ஆதிந2/07, நாள் 14.3.07

XI. அரசு ஆணை (நிலை) எண். 89, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந2) துறை, நாள் 13.7.07

XII. அரசு ஆணை (நிலை) எண். 118, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந2) துறை, நாள் 25.9.07

XIII. அரசு கடித (நிலை) எண். 146, ஆதி & பந (ஆதிந2) துறை, நாள் 19.12.07

XIV. அரசு கடித (நிலை) எண். 104/ஆதிந2/08, நாள் 11.8.08

XV. தாட்கோ மேலாண்மை இயக்குநர் கடித எண். C/5475/To7, நாள் 15.10.08 மற்றும் 12.8.10

XVI. ஆதிந ஆணையரின் கடித எண். த4/18527/08, நாள் 31.10.08 மற்றும் 10.8.09

-------

ஆணை:

மேலே 1 முதல் 14 வரை படிக்கப்பட்ட அரசாணைகளில் மத்திய / மாநில அரசுகளின் நிதியுதவியுடன் ஆதிதிராவிடர் நல விடுதிகள் கட்டுவதற்காக நிதி மற்றும் நிர்வாக ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. இவற்றில் 2001-02ம் ஆண்டு முதல் 2007-08ம் ஆண்டு முடிய சொந்தக்கட்டிடங்கள் கட்டுவதற்கு ஆணையிடப்பட்ட 35 ஆதிதிராவிடர் நல விடுதிகளுக்கு போதிய பணித்தளம் கிடைக்கப்பெறாமை, கட்டுமானப் பொருட்களின் விலை ஏற்றம் மற்றும் கட்டுமானப் பொருட்கள் / மின் விசைபொருட்களின் விலை ஏற்றத்தால் ஒப்பந்ததாரர்கள் அரசால் ஒப்பளிக்கப்பட்ட தொகைக்கு வரப்பெறாமை போன்ற காரணங்களினால் புதிய கட்டிடங்கள் கட்டுவதில் தாமதம் ஏற்பட்டு கட்டப்படாமல் உள்ளன என்று மேலே 15 மற்றும் 16-ல் படிக்கப்பட்ட கடிதங்களில் தாட்கோ மேலாண்மை இயக்குநர் மற்றும் ஆதிதிராவிடர் நல ஆணையர் ஆகியோர், மேலே கூறப்பட்ட காரணங்களின் அடிப்படையிலும், நடப்பாண்டிற்கான பொதுப்பணித்துறை விலைப்புள்ளிகளின் அட்டவணைப்படியும், இவ்வரசாணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள 35 ஆதிதிராவிடர் நல விடுதிகளுக்கு சொந்தக் கட்டிடங்கள் கட்டுவதற்கு ஏற்கனவே ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை போக, கூடுதலாக மொத்தம் ரூ. 643.40 இலட்சம் திருத்திய நிர்வாக / நிதி ஒப்பளிப்பு வழங்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்கள்.

2) ஏழை ஆதிதிராவிட மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்தும் நோக்குடனும், வாடகைக் கட்டிடங்களில் விடுதிகள் இயங்குவதால் அரசுக்கு ஏற்படும் நிதி இழப்பைத் தவிர்க்கும் பொருட்டும் கடந்த 2001-02 ஆண்டு முதல் 2007-08-ஆம் ஆண்டு வரை பல்வேறு காரணங்களால் கட்டப்பட்டாமல் நிலுவையில் உள்ள இணைப்பில் குறிப்பிட்டுள்ள 35 ஆதிதிராவிடர் நல விடுதிக் கட்டடங்களை கட்டி முடிக்கக் கூடுதலாகத் தேவைப்படும் தொகை ரூ. 643.40 இலட்சத்திற்கு திருத்திய நிர்வாக / நிதி ஒப்பளிப்பு வழங்கக்கோரும் ஆதிதிராவிடர் நல ஆணையர் மற்றும் தாட்கோ மேலாண்மை இயக்குநர் ஆகியோரின் கருத்துருவினை அரசு நன்கு பரிசீலனை செய்து அதனை ஏற்று, இணைப்பில் கண்டுள்ள 35 ஆதிதிராவிடர் நல மாணவ / மாணவியர் விடுதிகளுக்கு சொந்தக் கட்டிடங்கள் கட்டுவதற்காக கூடுதலாக தேவைப்படும் தொகை ரூ.643.40 இலட்சம் ( ரூபாய் ஆறு கோடியே நாற்பத்து மூன்று இலட்சத்து நாற்பது ஆயிரம் மட்டும் ) திருத்திய நிர்வாக ஒப்புதல் அளித்தும், அதில் ஏற்கெனவே தாட்கோவின் தன்பெயர் வைப்புக் கணக்கில் இருப்பில் உள்ள தொகை ரூ. 81,02,000/- போக, எஞ்சிய தொகை ரூ. 5,62,38,000/-க்கு (ரூபாய் ஐந்து கோடியே அறுபத்திரெண்டு இலட்சத்து முப்பத்தெட்டாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு வழங்கியும் அரசு ஆணையிடுகிறது.

3) மேலே பத்தி 2-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும்.

"4225-ஆதிதிராவிடர் பழங்குடியினர் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் குறித்த மூலதனச் செலவு -01 ஆதிதிராவிடர் நலன் -277 கல்வி பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப்பணிகள் - II மாநிலத் திட்டம் - JA ஆதிதிராவிடர் மாணவரில்லங்கள் கட்டுதல் 16 பெரும் பணிகள்

(த.தொ.கு 4225-01-277-JA-1603)"

4) மேலே பத்தி 2–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினம் தாட்கோ நிறுவனத்திற்கு பணமாக வழங்கப்படாமல் தாட்கோவின் கீழ்க்காணும் அலுவலர் பெயர் வைப்புத் தொகை கணக்குத் தலைப்பில் காசோலை / வரைவோலை மூலம் எதிர் வரவாக (Contra credit) வரவு வைப்பதற்கு ஆதிதிராவிடர் நல ஆணையருக்கு அனுமதி அளித்து அதிகாரம் வழங்கப்படுகிறது.

"K. வைப்பீடுகள், முன்பணங்கள், (b) வட்டி பெறாத வைப்புத் தொகைகள் 8443 00 உரிமையியல் வைப்புத் தொகைகள் 800 பிற வைப்புத் தொகைகள் BY தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வளர்ச்சிக் கழக வைப்புத் தொகைகள் – தாட்கோவின் வைப்புத் தொகைகள் (தாட்கோ) "

(DPC 8443 00 800 BY 00 0G ( Receipts)
(DPC 8443 00 800 BY 00 04) (Outgo)

5) மேலே பத்தி 2–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்திற்கு 2010–11ஆம் ஆண்டு திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்திய நிதி ஒதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இருப்பினும் மேற்கண்ட செலவினத்திற்கு 2010–11 ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் கொணர்ந்து சட்டப்பேரவையில் ஒப்புதல், பின்னர் பெறப்படும். இந்நிதி ஒதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி, ஒப்பளிக்கப்பட்ட தொகையினை பெற்று வழங்க ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை ஆணையருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. மேலும், பத்தி 2–ல் அனுமதிக்கப்பட்ட கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2010–11ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கை / திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதி ஒதுக்கத்தில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில், நிதி (ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் ) துறைக்கு அனுப்பி வைக்குமாறு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

6) மேற்படி ஒப்பளிக்கப்பட்ட தொகையைப் பெற்று இணைப்பில் கூறப்பட்டுள்ள 35 ஆதிதிராவிடர் நல மாணவ / மாணவியர் விடுதிகள் கட்டுவது தொடர்பாக தாட்கோ மேலாண்மை இயக்குநருடன் கலந்து ஆலோசித்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறு ஆதிதிராவிடர் நல ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

7) கட்டுமானப் பணிகளை குறித்த காலக்கெடுவிற்குள் கட்டிமுடிக்க கால அட்டவணை ஒன்றினை தாட்கோ மேலாண்மை இயக்குநருடன், கலந்து தயார் செய்யும்படியும், கட்டிட கட்டுமானப்பணி முன்னேற்றத்தினை உன்னிப்பான முறையில் கண்காணிக்கவும், குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் கட்டடங்கள் கட்டிமுடித்து ஆதிதிராவிடர் நலத்துறையிடம் தாட்கோ ஒப்படைப்பதை உறுதிப்படுத்தி கொள்ளும்படியும் ஆதிதிராவிடர் நல ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார். கட்டுமான பணிகுறித்த முன்னேற்ற அறிக்கையை அரசுக்கு அனுப்புமாறு ஆதிதிராவிடர் நல ஆணையர் மற்றும் தாட்கோ மேலாண்மை இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்கள் கட்டுமானப்பணியின் விரைவு மற்றும் அதன் தரத்தினை உறுதிபடுத்திக் கொள்ளும்படி தாட்கோ மேலாண்மை இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

–4–

8) இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.1189, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் / 2011, நாள் 12.1.2011-ல் அதன் இசைவினைப் பெற்று வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதி ஒதுக்கப்பேரேடு எண். 1781 ( ஆயிரத்து எழுநூற்று எண்பத்தி ஒன்று )

(ஆளுநரின் ஆணைப்படி)

விஷ்வநாத் ஷெகாவ்கர்
அரசு முதன்மைச் செயலர்.

பெறுநர்
ஆணையர், ஆதிதிராவிடர் நலன், சென்னை-5
மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை-101.
மாநில கணக்காய்வுத் தலைவர் , சென்னை-18/35/6.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை-5/35/1
சம்பந்தப்பட்ட மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள்
நகல்
நிதி வரவு - செலவு (பொது)/(ஆதிந ) /(BPE)துறை, சென்னை - 9
அமைச்சர் (ஆதிந) அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை - 9
முதலமைச்சரின் அலுவலகம், சென்னை -9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை முதன்மைச் செயலரின் தனிச்செயலர், சென்னை -9
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (அநமு.1) துறை, சென்னை - 9

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

12/1/2011
பிரிவு அலுவலர்

# இணைப்பு

(அரசு ஆணை (நிலை) எண்.8 /ஆதி(ம)பந (ஆதிந 2) / துறை, நாள் 12.1.2011)

| வரிசை எண் | முன்னர் ஒப்பளிப்பு செய்யப்பட்ட அரசாணை விவரம் | மாவட்டம் | விடுதி கட்ட ஆணையிடப்பட்ட இடம் | ஏற்கெனவே ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை (ரூ. லட்சத்தில்) | திருத்திய நிதி ஒப்பளிப்பு கோரும் தொகை (ரூ இலட்சத்தில்) | கூடுதலாக ஒப்பளிக்கப்படும் தொகை (ரூ இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|---|
| 1 | 35, 23.3.02 146, 21.11.06 க.எ.17/ ஆதிந.2/07, 23.02.07 | கோயம்புத்தூர் | பொள்ளாச்சி கல்லூரி மாணவியர் விடுதி | 31.50 | 51.04 | 19.54 |
| 2 | 95, 27.6.03 (ம) க.எ 2382/ ஆதிந9/04-1, 12.2.04 | தூத்துக்குடி | ஸ்ரீவைகுண்டம் மாணவியர் விடுதி | 31.50 | 49.00 | 17.50 |
| 3 | 195 05.09.03 | நீலகிரி | சாம்ராஜ் மாணவர் விடுதி | 31.50 | 57.84 | 26.34 |
| 4 | 31 18.02.04 | சென்னை | வேப்பேரி ஐ.டி.ஐ மாணவர் விடுதி | 31.50 | 54.90 | 23.40 |
| 5 | 31 18.02.04 | சென்னை | ராயபுரம் முதுகலை பட்டதாரி மாணவர் விடுதி | 31.50 | 54.90 | 23.40 |
| 6 | 31 18.02.04 | சென்னை | ராயபுரம் முதுகலை பட்டதாரி மாணவியர் விடுதி | 31.50 | 54.90 | 23.40 |
| 7 | 31 18.02.04 | சென்னை | ராயபுரம் கல்லூரி மாணவியர் விடுதி | 31.50 | 54.90 | 23.40 |
| 8 | 31,18.02.04, (ம) க.எ 23/ ஆதிந2/07, 14.3.07 | விழுப்புரம் | கவரை மாணவர் விடுதி | 31.50 | 51.04 | 19.54 |
| 9 | 121, 24.09.04 (ம) 146, 21.11.06, | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் கல்லூரி மாணவர் விடுதி | 31.50 | 51.04 | 19.54 |
| 10 | 121, 24.09.04 (ம) 146, 21.11.06, | திருப்பூர் | திருப்பூர் கல்லூரி மாணவியர் விடுதி | 31.50 | 51.04 | 19.54 |
| 11 | 3 06.01.05 | திருவள்ளூர் | மீனம்பேடு மாணவியர் விடுதி | 31.50 | 51.04 | 19.54 |
| 12 | 3, 06.01.05 (ம) 146, 21.11.06 | விழுப்புரம் | திண்டிவனம் கல்லூரி மாணவியர் விடுதி | 31.50 | 51.04 | 19.54 |
| 13 | 3 06.01.05 | திண்டுக்கல் | வில்பட்டி மாணவர் விடுதி | 31.50 | 50.00 | 18.50 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 14 | 3<br>06.01.05 | பெரம்பலூர் | வேப்பூர் மாணவர் விடுதி | 31.50 | 51.04 | 19.54 |
| 15 | 3<br>06.01.05 | அரியலூர் | ஆண்டிமடம் மாணவர் விடுதி | 31.50 | 51.04 | 19.54 |
| 16 | 3, 06.01.05 (ம) 146, 21.11.06 | சேலம் | சேலம் கல்லூரி மாணவியர் விடுதி | 31.50 | 51.04 | 19.54 |
| 17 | 3, 06.01.05 (ம) 146, 21.11.06 | சேலம் | சேலம் சட்டக் கல்லூரி மாணவர் விடுதி | 31.50 | 51.04 | 19.54 |
| 18 | 89<br>13.07.07 | சென்னை | வேப்பேரி பணிபுரியும் மகளிருக்கான விடுதி | 50.00 | 70.00 | 20.00 |
| 19 | 118, 25.09.07 (ம) க.நி.எ104<br>11.8.08 | சிவகங்கை | மணலூர் மாணவர் விடுதி | 35.00 | 51.04 | 16.04 |
| 20 | 118<br>25.09.07 | சென்னை | கோடம்பாக்கம் கல்லூரி மாணவர் விடுதி | 35.00 | 54.90 | 19.90 |
| 21 | 118<br>25.09.07 | விழுப்புரம் | மயிலம் மாணவியர் விடுதி | 35.00 | 51.04 | 16.04 |
| 22 | 118<br>25.09.07 | தேனி | வருசநாடு மாணவர் விடுதி | 35.00 | 51.04 | 16.04 |
| 23 | 118<br>25.09.07 | வேலூர் | குடியாத்தம் மாணவர் விடுதி | 35.00 | 51.04 | 16.04 |
| 24 | 118<br>25.09.07 | தூத்துக்குடி | குறுக்குச்சாலை மாணவர் விடுதி | 35.00 | 51.04 | 16.04 |
| 25 | 118<br>25.09.07 | விருதுநகர் | ஊஞ்சாம்பட்டி மாணவியர் விடுதி | 35.00 | 51.04 | 16.04 |
| 26 | 118,<br>25.09.07 | திருநெல்வேலி | திருநெல்வேலி கல்லூரி மாணவர் விடுதி, பேட்டை | 35.00 | 51.04 | 16.04 |
| 27 | 118<br>25.09.07 | திருநெல்வேலி | சங்கரன்கோயில் மாணவர் விடுதி | 35.00 | 51.04 | 16.04 |
| 28 | 118, 25.09.07<br>க.நி.எ 146/<br>ஆதிந2/07,<br>19.12.07 | தூத்துக்குடி | நாகம்பட்டி கல்லூரி மாணவர் விடுதி | 35.00 | 51.04 | 16.04 |
| 29 | 118<br>25.09.07 | பெரம்பலூர் | ஆலம்பாடி மாணவர் விடுதி | 35.00 | 51.04 | 16.04 |
| 30 | 118<br>25.09.07 | கரூர் | எலவனூர் மாணவியர் விடுதி | 35.00 | 51.04 | 16.04 |
| 31 | 118<br>25.09.07 | திருச்சி | ஏலூர்பட்டி மாணவர் விடுதி | 35.00 | 51.04 | 16.04 |
| 32 | 118, 25.09.07<br>க.நி.எ. 146/<br>ஆதிந2/07,<br>19.12.07 | தஞ்சாவூர் | மாரியம்மன் கோயில் மாணவர் விடுதி | 35.00 | 42.00 | 7.00 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 33 | 118, 25.09.07 | திருவாரூர் | மன்னார்குடி கல்லூரி மாணவியர் விடுதி | 35.00 | 42.00 | 7.00 |
| 34 | 118, 25.09.07 | நீலகிரி | உதகை ஐ.டி.ஐ மாணவர் விடுதி | 35.00 | 57.84 | 22.84 |
| 35 | 118, 25.09.07 | நீலகிரி | பந்தலூர் மாணவியர் விடுதி | 35.00 | 57.84 | 22.84 |
| | | | மொத்தம் | | | 643.40 |

//உண்மை நகல்//

12/1/2011
பிரிவு அலுவலர்.